59—

நியாய விலைக் கடை

***242—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, மா. மேலப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக்கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மா. மேலப்பட்டி கிராமத்திலுள்ள 185 குடும்ப அட்டைதாரர்களும் 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாங்கோட்டை தாய் அங்காடியில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகிறார்கள். மா. மேலப்பட்டி கிராம மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற 3 கிலோ மீட்டர் தொலைவு செல்ல வேண்டியுள்ளதைக் கருத்தில்கொண்டு தற்போது, நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளையெல்லாம் தளர்த்தி, மா. மேலப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கக்கூடிய பதிலுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். பகுதிநேர அங்காடியில் பணியாளர் நியமனம் என்பது, 500 குடும்ப அட்டைகள் இருக்கக்கூடிய ஒரு தாய் அங்காடியில் பணியாற்றுகின்ற அதே பணியாளரை, பகுதிநேர அங்காடிக்கும் பணியமர்த்துகிறபோது, இரண்டு அங்காடிகளுக்குமே பிரச்சினையாக இருப்பதால்,*

2011 ஆகஸ்ட் 25]

பகுதிநேர அங்காடிக்கென்று தனியாகப் பகுதிநேரப் பணியாளர் நியமனத்தையும் சேர்த்துச் செய்யப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதி நேர கடைகளுக்கும் தாய் கடைகளைப்போல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டுள்ளார். தற்போது, அரசுக்கு அதுமாதிரியான கருத்துரு ஏதுமில்லை. இருந்தாலும், ஒரு தாய் கடையை நடத்துவது என்பது, தாய் கடையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பகுதி நேர கடைகளை நடத்துவதற்குத்தான் இப்போது அனுமதியுள்ளது. அதுவும் அந்தத் தாய் கடையில் இருக்கின்ற பணியாளர்கள்தான் மூன்று நாட்கள் துணைக் கடையையும், மூன்று நாட்கள் தாய்க் கடையையும் நடத்துவதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாங்கோட்டை மேலப்பட்டி கிராமத்தில் எந்தக் கால அளவிற்குள் இந்தப் பகுதிநேர அங்காடி துவக்கப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுகோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட கரம்பக்குடி வட்டத்திலுள்ள மா. வேலப்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைப்பதற்கான செயற்குறிப்பு, புதுக்கோட்டை மண்டல இணைப் பதிவாளர் கடிதம் எண் 1649/2011 பொது விநியோகத் திட்டம்-4, நாள் 18-7-2011 இல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட வழங்கல் அலுவலகத்தின்

செயற்குறிப்பின்மீது கரம்பக்குடி வட்ட வழங்கல் அலுவலரின் குறிப்பினை கடித எண் கே2/20694/2011 நாள் 9-8-2011 இல் கோரியுள்ளார். வட்ட வழங்கல் அலுவலரின் இக்குறிப்பினைப் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத் துறை ஆணையருக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அதன் பின்னர் அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, ஆய்வுக்குப் பின்னர் உரிய ஆணைகள் அரசால் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்கள் மற்றும் வனப் பிரதேசங்களில் 100 குடும்பங்கள், 80 குடும்பங்கள், 70 குடும்பங்கள் என்று தனித் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 8 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் இடைவெளிகளில்தான் கிராமங்கள் இருக்கின்றன. எனவே, அப்படி வாழ்கின்ற சிறு, சிறு கிராமங்களுக்குப் பகுதி நேர கடைகள் அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, அரசுக் குறிப்பில், மலைப் பகுதிகளில் 400 குடும்ப அட்டைக்கு ஒரு தாய் கடையும், 100 குடும்ப அட்டைகள் உள்ள கிராமத்திற்கு ஒரு பகுதி நேர கடையும் அமைக்கலாம் என்றுதான் விதி உள்ளது. எனவே, 400 குடும்ப அட்டைகள் அல்லது 100 குடும்ப அட்டைகள் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரே முடிவு எடுத்து கடை அமைக்கலாம். ஆனால், அதற்கும் குறைவாக கார்டுகள் உள்ள கிராமங்களில் கடைகள் அமைக்க வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலைப் பெற்று, உணவுத் துறை ஆணையாளருக்கு கருத்துருவை அனுப்பி அனுமதி பெற்று, அதற்குப் பிறகே கடைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 25]

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ராஜமங்கலம், அனுப்பம்பட்டி, சின்னகந்திலி ஆகிய பகுதிகளில் பகுதி நேர கடைகள் வேண்டி கோரிக்கைகள் வைக்கப்பட்டன. ஆனால், அவை கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் நிராகரிக்கப்பட்டன. அந்தப் பகுதி மக்களெல்லாம் பகுதி நேர கடைகள் இல்லாமல் நீண்ட நாட்களாக அவதிப்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையை மாற்றித் தந்து தொகுதி மக்களுடைய குறைகளைப் போக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளவாறு, குறிப்பாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, கடைகள் திறப்பதற்குரிய அனைத்துத் தகுதிகளும் இருந்தால், நிச்சயமாக பகுதிநேர கடைகள் விரைவாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியிலுள்ள பல பகுதிகளுக்கு பகுதி நேர ரேஷன் கடைகளைப் பிரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதுகுறித்து நான் அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்கின்றபொழுது, தாய்க் கடையில் 500 கார்டுகள் அல்லது அதற்குமேல் இருந்தால்தான் கடைகள் பிரித்துத் தரப்படுமென்று சொல்கிறார்கள்.

ஏற்கெனவே *2* பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டிருந்தால், *3*-வது கடையைப் பிரிக்க இயலாதென்று அதிகாரிகள் சொல்லிவிடுகிறார்கள். ஆகையால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதனை கொண்டு சென்று, *100* அல்லது *150* கார்டுகள் இருக்கிற பகுதிகளுக்கு உடனடியாக பகுதி நேர ரேஷன் கடையை என்னுடைய மேலூர் தொகுதியிலுள்ள வெள்ளிமலை போன்ற மலைப் பகுதிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் *3*-வது பகுதி நேர நியாய விலைக் கடையை அமைப்பது குறித்து இங்கே கேள்வி எழுப்பியுள்ளார்கள். பொதுவாக, *500* குடும்ப அட்டைகள் அல்லது *150* குடும்ப அட்டைகள் உள்ள கிராமங்களில் துணை நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கும் குறைவாக, ஒன்றுக்கும் மேற்பட்ட *2* நியாய விலைக் கடைகள் அல்லது *3* பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருவினைப் பெற்று, அவசியம் கருதி உணவுத் துறை ஆணையாளரின்மூலம் கருத்துருவினைப் பெற்று அந்தக் கடைகள் அமைக்கப்படும். அப்படி அமைக்கப்படுகின்றபொழுது தாய் கடைகளினுடைய எண்ணிக்கை குறைவாகி விடுவதால், அவை பகுதி நேரக் கடைகள்போல் ஆகிவிடும். ஏனென்றால், இன்றைக்கு நியாய விலைக் கடைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊக்கத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. பணியாளர்கள் பற்றாக்குறையும் இருக்கின்றது. இதுபோக, இன்றைக்குப் பகுதி நேர கடைகளினுடைய எண்ணிக்கையும், தாய்க் கடைகளினுடைய எண்ணிக்கையும் குறைவாக இருந்தால், எது தாய்க் கடை என்ற சிக்கலை உருவாக்குகின்ற வகையில் இருக்கின்றது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்தக் கடைகளை அமைக்க வேண்டியதன் நோக்கம் மற்றும் அதற்கான கருத்துருவினைப் பெற்று அனுப்புவார்களேயானால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2011 ஆகஸ்ட் 25]

அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

மாற்றுப் பாதை

***1338—திரு. ப. சம்பத்குமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோட்டிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு மாற்றுப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தக் கோயில் 650 அடி உயரத்தில் மலையின் மேல் அமைந்துள்ளது. பக்தர்கள் இந்தக் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக 1,200 படிகள் கொண்ட படிக்கட்டுப் பாதை உள்ளது. மேலும், மலைக் கோயிலுக்குச் செல்வதற்கு வசதியாக 2 கிலோ மீட்டர், 550 மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலையும் உள்ளது. பக்தர்களின் வசதிக்கு இது போதுமானதாக இருப்பதன் காரணமாக இந்தப் பாதையே போதுமென்ற நிலைமை இருந்து வருகிறது. மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம் ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.